S.T.C.No.560/2021 Date:04.11.2022

**பு.சா.1** பரிமளா

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>**

1) எதிரியை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என அறிவிப்பிலோ புகாரிலோ குறிப்பிட்டு தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. பணம் கொடுக்கும்போது எனது மகன் எனது மாமியார் மற்றும் கண்ணன் என்பவர்கள் இருந்தார்கள் என்று அறிவிப்பிலோ புகாரிலோ குறிப்பிட்டு தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கும் எனக்கும் ஏற்கனவே வரவு செலவு இருந்தது என்று அறிவிப்பிலோ புகாரிலோ குறிப்பிட்டு தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. காசோலையில் கையொப்பம் தமிழிலும் மற்ற விபரங்கள் ஆங்கிலத்திலும் இருப்பதற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் அதுபற்றி தெரிவிக்கமுடியாது.

2) ரூபாய் 5 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு போதிய வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி 2010-ல் என்னிடம் போட்டிருந்த சீட்டு தொகைக்காக நான் எதிரியிடம் செக்யூரிட்டிக்காக பெற்ற வெற்று காசோலையை பெற்றுக்கொண்டு சீட்டு தொகை கட்டி முடிந்தபிறகும் மேற்படி காசோலையை எதிரிக்கு திருப்பி தராமல் மோசடியாக காசோலையை நிரப்பி எதிரியின் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் அவர் வீட்டிற்கு மதில் சுவர் எழுப்பியிருந்தார் என்றும் என்னிடம் மதில் சுவர் கட்டுவதற்காக பணம் வாங்கினார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. பணம் கடன் பெறும் சூழ்நிலையில் எதிரி அப்போது இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

S R BABU Digitally signed by S R BABU Date: 2022.11.04 18:06:26 +0530

Sd/- P.M. Parimala

Judicial Magistrate No.1,
Sankari.